**ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் நிரந்தர தர்சனத்தின் அவசியம் - 4**

ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் குளத்தில் முதன்முறையாக எழுந்தருயது விஷயத்தில் **ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் மூர்த்தி பின்னம் என்றும் அதனால் அவரை குளத்தில் எழுந்தருள செய்துள்ளனர்** என்று ஒரு கருத்தும் உள்ளது.

இது விஷயமாக மூலவர் மற்றும் உத்ஸவ மூர்த்திகளை ப்ரதிஷ்டை, அந்த மூர்த்தியில் **எதேனும் பின்னம் ஏற்பட்டால் அந்த மூர்த்திகளை என்ன செய்ய வேண்டும், பழமையான மூர்த்திகள், அதில் ஏதேனும் பின்னம்** ஏற்பட்டால் அதை எவ்வாறு கையால வேண்டும் என்று விஷயத்தில் **பஞ்சராத்திர மஹோபநிஷத் தரும் ஆகம விதிகள் தரும் தகவல்கள் என்ன?**

**பஞ்சராத்திர மஹோபநிஷத் - பாத்ம ஸம்ஹிதையில் - 4 வது - சர்யாபாதம் - 17ம் அத்தியாயம்** நமக்கு முர்த்தி **ஜீர்ணோதாரண விதிகளை** விரிவாக விளக்குகின்றது. அதை எங்கள் அறிவிற்கு எட்டிய வரையில் இங்கு இங்கு எடுத்து சொல்கின்றேம்.

இதில் மிகவும் முக்கியமான சிதைந்த பிம்பத்தை பற்றிய குறிப்புகள் உள்ளன. அதில் சில முக்கிய தகவல்கள்.

1. **ஆதாவது " சிதைந்த பிம்பங்களை முன்பிருந்தைப் போலவே சரி செய்ய முடியுமாயின், அப்பிம்பங்களை விடவே கூடாது.** (எவ்விதத்திலும் சரி செய்ய முடியவில்லை யென்றால்த்தான் அதை விடுத்து புதிய பிம்பம் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.)
2. ஸ்வயம் வ்யக்தம், ஆர்ஷம், திவ்யம், மானுஷம் என்ற நான்கு விதமான பகவத் விக்ரஹங்களிலும் ரத்னமயமான **பகவத் விக்ரஹங்களிலும் அங்கஹாநி ஏற்படின் தங்கத்தினால் சேர்க்க வேண்டும். விட்டு விடக்கூடாது**. அவ்வாறே சிலாவிக்ரஹங்களிலும், **மரம் முதலான ஐந்து வகை விக்ரஹங்களிலும், அங்கஹாநியேற்படினும், அவற்றை விடாமல்,**

**தங்க்கம்பியால் பந்தனம் செய்ய வேண்டும்.**

3. பல அங்கங்கள் சேதமடைந்து விடின், அத்தகைய பிம்பங்களை விடுத்து புத்தம் புதிய பிம்பங்களை உண்டாக்கும் போதும், பிம்ப சக்தியை கும்பத்தில் ஆவாஹநம் செய்து, முன்பு இருந்ததைப் போலவே பிம்பத்தைச் செய்து, அதிவாஸாதிகளைப் ப்ரதிஷ்டையில் போலவே செய்ய வேண்டும்.
4. சரி செய்ய முடியாதவாறு விடப்பட்ட லோஹத்தினாலான பிம்பத்தை உருக்கி, மீண்டும் புதியதாய் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

**ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பல்லாண்டுகளாக நீருக்குள் இருந்தாலும் அவர் திருமேனியில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை, அதாவது அங்க பங்கம் இன்றியுள்ளார்**. அப்படி ஏதேனும் **பின்னம் இருந்தாலும்** அதை **சீர் செய்து ஆராதனை** செய்ய வேண்டும் என்றும் அந்த **திருமேனியை உபேக்ஷிக்க கூடாது** என்பது பாத்ம ஸம்ஹிதையின் ஆகம விதிகள் வழிகாட்டுதல்களாக உள்ளது .

எங்களுக்கு தெரிந்த ஆகம வல்லுநர்களிடம் விசாரித்து நாங்கள் புரிந்து கொண்ட வரையில் ஆகம விதிகள் கூறுகின்ற விஷயத்தை தொகுத்துள்ளேம். இவற்றிற்கும் **மேலாக பல வழிகாட்டுதல்களை நமது ஆகமங்கள் விரிவாக வழங்குகின்றன. அவைகளையும் ஒப்பு நோக்கி ஆகம வல்லுநர்கள் முடிவு செய்வது சாலச்சிறந்ததாகும்.**

**வைபவங்கள் உடைய இப்பெருமாளை ஏதோ ஒரு காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக அனந்தஸரஸில் ஆதி அத்திகிரீ வரதரை எழுந்தருள செய்துள்ளனர். இந்த அனந்தஸரஸில் பொதுமக்கள் நீராடுவார்கள், கால் சுத்தம் செய்வார்கள்.** அப்படிப்பட்ட **அந்த குளத்தினுள்** ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆதாரமானவரும், ஆழ்வார்கள், ஆச்சார்யார்களால் கொண்டாடப்படும் **ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை பகவத் ஸ்ரீ ராமானுஜரின் 1000 வது** திருநட்சத்திரம் **, ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர் 750வது** திருநட்சத்திரம் வைபவமாக கொண்டாடப்படும் இச்சமயத்தில் **மீண்டும் எழுந்தருள செய்வது** எங்களை போன்ற பக்தர்களுக்கும், வைஷ்ணவ பாகவதோத்தமர்களுக்கும் **மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுகிறது.**

மேலும் இந்த கோயில் ஸ்தல வரலாறு, கல்வெட்டு குறிப்புகள் படி இவரே ஆதி மூலவர். இப்படி பல வைபவங்கள் உடைய இவரை தரிசனம் செய்வது நாம் கண்களை பெற்ற பயன். **பிறவியிலேயே கண் பார்வை இழந்த ஒருவருக்கு கண் பார்வை கிடைத்து, அது மீண்டும் இழந்தால் அவருக்கு எப்படி இருக்குமே அப்படி உள்ளது பக்தர்கள் நிலை.**

**கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்....**நம் கூரத்தாழ்வாருக்கு கண்ணளித்து தன்னைக் காணச்செய்த **இந்த பெருமாளை தரிசனம் செய்து கொண்டே இருப்பதுதானே நாம் கண்கள் பெற்ற பயன்**.

ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை தரிசனம் செய்ய உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருடம் முழுவதும் வருகை புரிவார்கள். அதனால் நமது காஞ்சீபுரம் மற்றும் வரதர் கோயில் மேலும் மேலும் புகழ் பெறும்.

நமது நாடும், நமது திருக்கோயிலும் பல பெருமைகள், நன்மைகள் அடைய ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் தர்சன வைபவம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற **பக்தர்கள் ப்ராத்தனைகளை திருக்கோயில் முக்கியத்தர்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அத்யாபக கோஷ்டியினர், ஸ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள், இந்து அறநிலையத்துறை, தமிழக அரசு என்று அனைவரும் ஒன்றுபட்டு செவி சாய்த்து பக்தர்களின் பிராத்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.**

jeernodharana vidh... ×

3 / 6



ஸ்வயம் வ்யக்தம்-ஆர்ஷம்-திவ்யம்-மானுஷம் என்ற நான்கு விதமான பகவத் விக்ரஹங்களிலும், ரத்னமயமான பகவத் விக்ரஹங்களிலும் அங்கஹானி ஏற்படின் தங்கத்தினால் சேர்க்க வேண்டும். விட்டு விடக்கூடாது. அவ்வாறே சிலாவிக்ரஹங்களிலும், மரம் முதலான ஐந்து வகை விக்ரஹங்களிலும், அங்கஹானியேற்படினும், அவற்றை விடாமல், தங்கக்கம்பியால் பந்தனம் செய்ய வேண்டும்.

பல அங்கங்கள் சேதமடைந்து விடின், அத்தகைய பிம்பங்களை விடுத்து புத்தம் புதிய பிம்பங்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அங்கத்தைச் ஸந்தி செய்யும் போதும், புதிய வேறு பிம்பத்தை உண்டாக்கும் போதும், பிம்ப சக்தியை கும்பத்தில் ஆவாஹனம் செய்து, முன்பு இருந்ததைப் போலவே பிம்பத்தைச்செய்து, அதிவாஸாதிகளைப் ப்ரதிஷ்டையில் போலவே செய்ய வேண்டும்.

சிதைந்த பிம்பங்களை முன்பிருந்ததைப் போலவே சரி செய்ய முடியுமாயின், அப்பிம்பங்களை விடவே கூடாது. (எவ்விதத்திலும் சரி செய்ய முடியவில்லையென்றால்தான் அதை விடுத்து புதிய பிம்பத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.)

சரி செய்ய முடியாதவாறு விடப்பட்ட லோஹத்தினாலான பிம்பத்தை உருக்கி, மீண்டும் புதியதாய் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

பெருமாளின் உத்ஸவபிம்பம் ஜீர்ணித்து, புதியதாய் உண்டாக்கப்படினும், முன்பிருந்த பழைய தேவிமார்களின் பிம்பங்களோடேயே அப்பிம்பத்தைச் சேர்க்க வேண்டும். புதிய தேவிமார்களின் பிம்பங்களை உண்டாக்கக் கூடாது.

# பதினேழாம் அத்தியாயம்

## ஜீர்ணோத்தாரண விதி

**ப்ரம்மாவின் கேள்வியும், பகவானின் விடையும்:(சு.1-37½)**

பிரதிமைகள் ஆலயங்கள் ஆகியவை பழையனவாகிச் சிதைந்துவிடின், புதுப்பிப்பதற்கான முறையை அறிய விரும்புகிறேன். உள்ளவாறு அதை எனக்கு விளக்க வேண்டும்.

**பகவான்:- ஸ்வயம் வ்யக்தாதிகளில் அங்கத்தில் வைகல்யமேற்படின் செய்யும் விதிமுறை:**



ஸ்வயம் வ்யக்தம்-ஆர்ஷம்-திவ்யம்-மானுஷம் என்ற நான்கு விதமான பகவத் விக்ரஹங்களிலும், ரத்னமயமான பகவத் விக்ரஹங்களிலும் அங்கஹானி ஏற்படின் தங்கத்தினால் சேர்க்க வேண்டும். விட்டு விடக்கூடாது. அவ்வாறே சிலாவிக்ரஹங்களிலும், மரம் முதலான ஐந்து வகை விக்ரஹங்களிலும், அங்கஹானியேற்படினும், அவற்றை விடாமல், தங்கக்கம்பியால் பந்தனம் செய்ய வேண்டும்.

பல அங்கங்கள் சேதமடைந்து விடின், அத்தகைய பிம்பங்களை விடுத்து புத்தம் புதிய பிம்பங்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அங்கத்தைச் ஸந்தி செய்யும் போதும், புதிய வேறு பிம்பத்தை உண்டாக்கும் போதும், பிம்ப சக்தியை கும்பத்தில் ஆவாஹநம் செய்து, முன்பு இருந்ததைப் போலவே பிம்பத்தைச்செய்து, அதிவாஸாதிகளைப் ப்ரதிஷ்டையில் போலவே செய்ய வேண்டும்.

சிதைந்த பிம்பங்களை முன்பிருந்ததைப் போலவே சரி செய்ய முடியுமாயின், அப்பிம்பங்களை விடவே கூடாது. (எவ்விதத்திலும் சரி செய்ய முடியவில்லையென்றால்தான் அதை விடுத்து புதிய பிம்பத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.)

சரி செய்ய முடியாதவாறு விடப்பட்ட லோஹத்தினாலான பிம்பத்தை உருக்கி, மீண்டும் புதியதாய் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

பெருமானின் உத்ஸவபிம்பம் ஜீர்ணித்து, புதியதாய் உண்டாக்கப்படினும், முன்பிருந்த பழைய தேவிமார்களின் பிம்பங்களோடேயே அப்பிம்பத்தைச் சேர்க்க வேண்டும். புதிய தேவிமார்களின் பிம்பங்களை உண்டாக்கக் கூடாது.

பழைய தேவிமாருக்கு பூஜையானது இடைவிடாமலிருப்பின் புதிய மூலவரோடு மீண்டும் முதன் முதலில் செய்யப் படும் கல்யாணோத்ஸவத்தைச் செய்ய வேண்டா.

ப்ரபை-பத்மம் முதலானவற்றிற்கு வைகல்யமோ-சலனமோ ஏற்பட்டாலும், சக்ரம் முதலான ஆயுதங்களிலும் அவ்வாறு ஏற்பட்டாலும், சரிசெய்யும்வரை பெருமானுக்கு ஆராதனம் செய்யக்கூடாது. ப்ரதிமையின் சக்தியைப் உத்வாஸநம் செய்து, மூலபேரத்திலோ அல்லது கும்பத்திலோ ஆவாஹநம் செய்து, பின்பு சக்ரம் முதலானவற்றைச் சரி செய்து, அவற்றைப்ப்ரோக்ஷித்து சக்தியை மீண்டும் ப்ரதிமையில் ஆவாஹித்து பூஜிக்க வேண்டும். கல் முதலியவற்றால் ஆன விக்ரஹங்களில், ஜீர்ணத்தன்மை ஏற்பட்டால், பாலாலயம் செய்து ஜீர்ணமான விக்ரஹங்களிலிருந்து சக்தியை பாலாலய பிம்பத்தில் ஆவாஹநம் செய்து, பெருமானை ஆராதிக்க வேண்டும். விடப்பட்ட பிம்பத்தை பூமியில் மறைக்க வேண்டும். அல்லது ஜலத்திலிடவேண்டும்.

ப்ராஸாதத்தின் கர்பக்ருஹம் பழுதடைந்தால் பரிவாரங்களுடன் பகவானைப் பாலாலயத்தில், முன்பு மூலவிக்ரஹத்தில் செய்ததுபோலவே பூஜையைச் செய்யவேண்டும்,

கர்ப்பக் க்ருஹம் ஜீர்ணமடைந்து மூலபேரம் கெடாமலிருந்தால், அங்குள்ள தேவ பரிவாரங்களான தேவதைகளை மூலபேரத்தில் ஆவாஹநம் செய்யவேண்டும். த்ருவ பேரமானது ஜீர்ணமாகி, கர்ப்பக் க்ருஹம் நன்றாக இருந்தால், அங்குள்ள தேவதைகளை வேறு இடத்தில் ஆவாஹநம் செய்யவேண்டிய அவசியமில்லை.

ப்ராஸாதமானது சிதிலமாகாமல் அங்கத்தில் மட்டும் கெடுதல் ஏற்பட்டிருந்தால் எல்லாவற்றையும் அழித்துப் புதியதான ப்ராஸாதத்தைக் கட்ட முயற்சிக்கக் கூடாது. அப்படிச் செய்யும் எஜமானனுடைய குடும்பம் சீக்ரமே அழிந்தொழியும். சாஸ்த்திரங்களில் கூறிய ப்ரமாணத்திற்கேற்ப இல்லாமல், முன் தவறாகக் கட்டிய ப்ராஸாதத்தை அழித்து மீண்டும் விதிமுறைப்படி அழகாகக் கட்டவேண்டும். பஹுபேர ஏகபேரங்கள் ஜீர்ணோத்தாரணம்

|| ஸ்ரீரஸ்து ||

பாஞ்சராத்ர மஹோபநிஷத்

என்னும்

# பாத்ம ஸம்ஹிதை

## நான்காவது - சர்யாபாதம்

### முதல் அத்யாயம்

**பகவானை ஆராதிப்பதைப் பற்றி பிரம்மாவின் கேள்வி : (சுலோ. 1-2).**

கர்ஷணம் முதல் ப்ரதிஷ்டை வரையிலான பகவானுடைய ஆராதன விதி எப்படிப்பட்டது? யார் அதிகாரி? இவைகளை முழுவதும் சொல்லியருள வேண்டும்.

**பகவான் தன் ஆராதனத்திற்கு யார் யார் அதிகாரி என்றுரைத்தல் : (சுலோ. 3-4)**

பகவானை ஆராதிப்பதில், பிராம்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர் என்கிற நான்கு வருணத்தாருக்கும், அனுலோமர்களுக்கும், பிரதிலோமரில் ஸூதனுக்கும் அதிகாரம் உண்டு.

**ஏகாயன சாகிகளுக்குச் சிறப்பான அதிகாரம். (சுலோ. 5)**

ஏகாயன வேதம் ஸத்ப்ரஹ்மத்தைக் கூறுகிறபடியால், அந்த சாகையைச் சேர்ந்த பிராம்மணர்கள் முக்யாதிகாரிகள்.

**ஏனையோருக்கு தீக்ஷை பெற்று அதிகாரம் : (சுலோ. 6)**

மற்ற சாகையைச் சேர்ந்த நான்கு வருணத்தார்க்கும் அனுலோமர்களுக்கும் தீக்ஷை பெற்ற பின்னரே அதிகாரம்.

**ஸூதன் விசேஷ தீக்ஷை பெற்று தனக்காக மட்டும் ஆராதனம் செய்யலாம் : (சுலோ. 7)**

ஸூதன் விசேஷ தீக்ஷை பெற்று தனக்காக மட்டும் ஆராதிக்கலாம்.

**பிராம்மணர்கள் இரு கல்பத்திலும் பிறருக்காகவும் ஆராதிக்கலாம் : (சுலோ. 7)**

பிராம்மணர்கள் முக்ய கல்பத்திலும் அநு கல்பத்திலும் பிறருக்காக ஆராதிக்கலாம்.

**தீக்ஷை பெறாதவர்களுக்கு அதிகாரமில்லை. (சுலோ. 8)**

தீக்ஷை அல்லது ஸம்ஸ்காரம் பெறாதவர்களுக்கு ஆராதிக்க அதிகாரமில்லை.

**தீக்ஷை பெறுவதால் ஆராதனம் செய்ய அதிகாரம் ; (சுலோ. 9)**

தீக்ஷணீய இஷ்டியினால் பிராம்மண்யம் நிலைப்பதைப்போல தீக்ஷை பெறுவதனால் பிராம்மணர் முதலானோர் பகவானைப் பூஜிக்க அருகதை பெறுகிறார்கள்.

வான். எனவே அஷ்டாங்கப்ரணாமம் செய்பவர்களுக்கு அவை ஒரு தலையன்றோ? வாஸுதேவன் ஆலயத்தில் நாடொறும் அவன் கதைகளைக் கூறுபவர்கள் வாக் பதித்வத்தை அடைவர். இவ்வாறு காராம்பசு, முதலானவற்றைத்தானம் செய்பவருக்கும் பலன் ஏற்படும்; ப்ரம்ம லோகம் முதலான லோகங்களில் நிலையான வாஸத்தைப்பெறுவர். பெருமாளுக்குப் பாயஸம் முதலிய ஹவிஸ்ஸுக்களை நிவேதனம் செய்பவர், பரமானந்த ரஸைக பரிபூர்ணாத்மாக்களாய், விஷ்ணுவின் ஸந்நிதியில் மகிழ்வர். பக்ஷ்ய, பானீய-போஜ்யங்கள் மற்றுமுள்ள பொருள்களை அளிப்பவர்கள் ச்வேத த்வீபத்தில் பகவானுடைய ஸந்நிதியில் பரமஸுகிகளாய் வஸிப்பர். அதிகம் கூறுவானேன்? வாசுதேவனுக்காக ஆதரவுடன் பொருளைக் கொடுப்பவன், தான் விரும்பிய ஸ்தானத்தை அடைவான். மனிதர்கள் திருவிலகிடல் முதலான கைங்கர்யங்களுக்கு உரிய நற்பயனை அனுபவித்தப்பின், இருக்கின்ற கர்ம சேஷங்காரணமாக அதற்கனுகுணமான தும் மிகவும் சிறந்ததுமாள பிறவிகளில் பிறந்து, போகமுடையவராயும் சுகமுடையவராயும் எப்போழ்துமிருப்பர்,

**ஆலயப்பொருளை அபகரிப்பதன் பலன்கள்.**

பெருமாளின் ப்ராஸாதம்-மண்டபம் முதலியவற்றை ஆக்ரமித்து அனுபவிக்கும் மூடர்கள் இறந்தபின் ஒழிவில்லாமல் நரகத்தில் வஸிப்பர். பிறகு மிக மட்டமான பிறவிகளில் ஜன்மத்தினை அடைவர். அணிகலன்கள்-ஆடைகள்-குடை முதலானவற்றை அபஹரிக்கும் மூடன் வல்லினை கயிற்றால் கட்டுண்டகழுத்தினனாய், நரகங்களில் இழுக்கப் படுவான். வாஹனம், வண்டி முதலானவற்றைத் திருடுபவன், செந்தழல் நரகில் வெந்து துன்பமடைவன்; மீண்டும் கழுதை, ஒட்டகம் முதலான நீசயோனிகளில் பிறவியெடுப்பான். சந்தனம், புஷ்பம் முதலானவற்றை அபகரிப்பவர் யமனுலகில் யாதனா வேதனையை அனு பவிப்பர்; பின்பு மூஞ்சோறுகளாய்ப் பிறப்பர். உபாநஹம், பாதுகை, பீடம், விசிறி முதலானவற்றைத் திருடுபவர், நரக வேதனையை அநுபவித்துப் பின் பாம்புகளாய்ப் பிறப்பர். பசு, தங்கம், கழனி, ஆடை முதலான பொருள்களைத் திருடுபவர், ஒழிவில்லாமல் நரகவேதனையை நுகர்ந்து மீண்டும் நாய் முதலான நீசப்பிறவிகளை அடைவர். தேவ-ப்ராம்மணப் பொருள்களை அபகரிப்பவர் இவ்வாறு பல விதமான நரகங்களை அடைந்து, நீண்ட காலம் துன்பத்தை அடைவர்.

தேஹப் பயிற்சி- அழுக்குத்தேய்த்தல்-எண்ணெய் தேய்த்தல், ஸ்நானம், பானம், சாப்பாடு முதலியவற்றை விஷ்ணுவின் ஆலயத்தில் விதிக்குப்புறம்பாக ஐச்சிகமாகச் செய்பவர் எல்லோரும் நரகத்தை அடைந்து, பிறகு நீச யோனிகளில் பிறப்பர். பெருமாளின் பிம்பங்களை தகர்த்தல், உடைத்தல். விரிசலுண்டாக்கல், விகாரம் அடையச் செய்தல், முதலான தொழில் களில் முயற்சி கொண்ட பாபாத்மாக்கள், மிகவும் கொடூரமான பலவித நரகங்களை முறை யாகவே அடைவர். இவ்வாறே சிறிய-பெரிய அபசாரங்களில் ஈடுபட்ட மனிதர்கள் இறந்து நரகத்தில் துன்பமடைவர்.

---

## பதினேழாம் அத்தியாயம்

### ஜீர்ணோத்தாரண விதி

**ப்ரம்மாவின் கேள்வியும், பகவானின் விடையும்: (சு.1-37½)**

பிரதிமைகள் ஆலயங்கள் ஆகியவை பழையனவாகிச் சிதைந்துவிடின், புதுப்பிப் பதற்கான முறையை அறிய விரும்புகிறேன். உள்ளவாறு அதை எனக்கு விளக்க வேண்டும்.

**பகவான்:- ஸ்வயம் வ்யக்தாதிகளில் அங்கத்தில் வைகல்யமேற்படின் செய்யும் விதிமுறை:**

ஸ்வயம் வ்யக்தம்-ஆர்ஷம்-திவ்யம்-மானுஷம் என்ற நான்கு விதமான பகவத் விக்ரஹங்களிலும், ரத்னமயமான பகவத் விக்ரஹங்களிலும் அங்கஹானி ஏற்படின் தங்கத்தினால் சேர்க்க வேண்டும். விட்டு விடக்கூடாது. அவ்வாறே சிலாவிக்ரஹங்களிலும், மரம் முதலான ஐந்து வகை விக்ரஹங்களிலும், அங்கஹானியேற்படினும், அவற்றை விடாமல், தங்கக்கம்பியால் பந்தனம் செய்ய வேண்டும்.

பல அங்கங்கள் சேதமடைந்து விடின், அத்தகைய பிம்பங்களை விடுத்து புத்தம் புதிய பிம்பங்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அங்கத்தைச் ஸந்தி செய்யும் போதும், புதிய வேறு பிம்பத்தை உண்டாக்கும் போதும், பிம்ப சக்தியை கும்பத்தில் ஆவாஹனம் செய்து, முன்பு இருந்ததைப் போலவே பிம்பத்தைச்செய்து, அதிவாஸாதிகளைப் ப்ரதிஷ்டையில் போலவே செய்ய வேண்டும்.

சிதைந்த பிம்பங்களை முன்பிருந்ததைப் போலவே சரி செய்ய முடியுமாயின், அப்பிம்பங்களை விடவே கூடாது. (எவ்விதத்திலும் சரி செய்ய முடியவில்லையென்றால்தான் அதை விடுத்து புதிய பிம்பத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.)

சரி செய்ய முடியாதவாறு விடப்பட்ட லோஹத்தினாலான பிம்பத்தை உருக்கி, மீண்டும் புதியதாய் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

பெருமாளின் உத்ஸவபிம்பம் ஜீர்ணித்து, புதியதாய் உண்டாக்கப்படினும், முன்பிருந்த பழைய தேவிமார்களின் பிம்பங்களோடேயே அப்பிம்பத்தைச் சேர்க்க வேண்டும். புதிய தேவிமார்களின் பிம்பங்களை உண்டாக்கக் கூடாது.

பழைய தேவிமாருக்கு பூஜையானது இடைவிடாமலிருப்பின் புதிய மூலவரோடு மீண்டும் முதன் முதலில் செய்யப் படும் கல்யாணோத்ஸவத்தைச் செய்ய வேண்டா.

ப்ரபை-பத்மம் முதலானவற்றிற்கு வைகல்யமோ-சலனமோ ஏற்பட்டாலும், சக்ரம் முதலான ஆயுதங்களிலும் அவ்வாறு ஏற்பட்டாலும், சரிசெய்யும்வரை பெருமாளுக்கு ஆராதனம் செய்யக்கூடாது. ப்ரதிமையின் சக்தியை உத்வாஸநம் செய்து, மூலபேரத்திலோ அல்லது கும்பத்திலோ ஆவாஹநம் செய்து, பின்பு சக்ரம் முதலானவற்றைச் சரி செய்து, அவற்றைப்ரோக்ஷித்து சக்தியை மீண்டும் ப்ரதிமையில் ஆவாஹித்து பூஜிக்க வேண்டும். கல் முதலியவற்றால் ஆன விக்ரஹங்களில், ஜீர்ணத்தன்மை ஏற்பட்டால், பாலாலயம் செய்து ஜீர்ணமான விக்ரஹங்களிலிருந்து சக்தியை பாலாலய பிம்பத்தில் ஆவாஹநம் செய்து, பெருமாளை ஆராதிக்க வேண்டும். விடப்பட்ட பிம்பத்தை பூமியில் மறைக்க வேண்டும். அல்லது ஜலத்திலிடவேண்டும்.

ப்ராஸாதத்தின் கர்பக்ருஹம் பழுதடைந்தால் பரிவாரங்களுடன் பகவானைப் பாலாலயத்தில், முன்பு மூலவிக்ஹத்தில் செய்ததுபோலவே பூஜையைச் செய்யவேண்டும்,

கர்ப்பக் க்ருஹம் ஜீர்ணமடைந்து மூலபேரம் கெடாமலிருந்தால், அங்குள்ள தேவ பரிவாரங்களான தேவதைகளை மூலபேரத்தில் ஆவாஹநம் செய்யவேண்டும். த்ருவ பேரமானது ஜீர்ணமாகி, கர்ப்பக் க்ருஹம் நன்றாக இருந்தால், அங்குள்ள தேவதைகளை வேறு இடத்தில் ஆவாஹநம் செய்யவேண்டிய அவச்யமில்லை.

ப்ராஸாதமானது சிதிலமாகாமல் அங்கத்தில் மட்டும் கெடுதல் ஏற்பட்டிருந்தால் எல்லாவற்றையும் அழித்துப் புதியதான ப்ராஸாதத்தைக் கட்ட முயற்சிக்கக் கூடாது. அப்படிச் செய்யும் எஜமானனுடைய குடும்பம் சீக்ரமே அழிந்தொழியும். சாஸ்த்திரங்களில் கூறிய ப்ரமாணத்திற்கேற்ப இல்லாமல், முன் தவறாகக் கட்டிய ப்ராஸாதத்தை அழித்து மீண்டும் விதிமுறைப்படி அழகாகக் கட்டவேண்டும். பஹுபேர ஏகபேரங்கள் ஜீர்ணோத்தாரணம்